**29.02.2020**

**பத்திரிக்கை செய்தி**

**மெட்ரோ இரயில் நிலையங்களில் 5 நாட்கள் நடைபெற்ற இலவச மருத்துவ முகாம்களில் மொத்தம் 5200 நபர்கள் பயணடைந்தனர்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், அப்போலோ மருத்துவமனையுடன் இணைந்து மெட்ரோ இரயில் பயணிகள் மற்றும் பொதுமக்களின் நலனுக்காக இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் கடந்த 24.02.2020 முதல் 28.02.2020 வரை காலை 8 மணி முதல் 12 மணி வரை மற்றும் மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரை மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெற்றது.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாம் நேற்று (28.02.2020) சென்ட்ரல் மெட்ரோ, ஏஜி டி.எம்.எஸ், சைதாப்பேட்டை, ஆலந்தூர், எல்.ஐ.சி, திருமங்கலம், வடபழனி, வண்ணாரப்பேட்டை, ஈக்காட்டுத்தாங்கல், ஆயிரம் விளக்கு, அண்ணா நகர் கோபுரம் மற்றும் செனாய் நகர் மெட்ரோ ஆகிய 12 மெட்ரோ இரயில் நிலையங்களில் காலை 8 மணி முதல் 12 மணி வரையும் மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையும் நடைபெற்றன. மெட்ரோ பயணிகள், பொதுமக்கள் மற்றும் மெட்ரோ ஊழியர்கள் காலையில் 564 பேரும் மாலையில் 585 பேர் உட்பட சுமார் 1149 பேர் இந்த முகாமில் இன்று பயனடைந்தனர்.

இந்த இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில்

பி.எம்.ஐ (உயரம் மற்றும் எடை),
இரத்த அழுத்தம்,
சீரற்ற இரத்த சர்க்கரை, மற்றும்
ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் நடைபெற்ற இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில் முதல் நாள் நடைபெற்ற மருத்துவ முகாமில் 595 நபர்கள், இரண்டாம் நாள் 1272 நபர்கள், மூன்றாவது நாள் 1086 நபர்கள், நான்காம் நாள் 1098 நபர்கள் மற்றும் ஐந்தாம் நாள் 1149 நபர்களும், மொத்தம் 5200 நபர்கள் இந்த 5 நாட்கள் நடைபெற்ற இலவச பொது சுகாதார மருத்துவ முகாமில் பயனடைந்தனர்.